**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். கமுதி**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர். கமுதி**

**2026 ஆம் வருடம் மே மாதம் 26 ம் நாள் செவ்வாய்கிழமை**
**சுருக்குப்பட்டிகை வழக்கு எண். 172/2025**
**CNR. NO.TNRM070008872025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கமுதி காவல்நிலையம்<br>குற்ற எண் – 121/2025 |
| எதிரியின் விபரம் | | |
| 2. | பெயர் | நிறைபாண்டியன் |
| 3. | த/பெ. | லெட்சுமணன் |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | தாதாகுளம், கமுதி தாலுகா |
| 6. | வயது | 31/25 |
| | | |
| 7. | சம்பவ நாள் | 02-06-2025 ம் தேதி 10.00 மணி |
| 8. | புகார் தேதி | 02-06-2025 ம் தேதி 13.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | Appeared U/s.35(3) and (4) BNS Notice |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | Appeared U/s.35(3) and (4) BNS Notice |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 30-06-2025 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 25-05-2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 25-05-2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது பிரிவுகள் 296(பி), 115(2) ன் |

<table>
<tr><td></td><td></td><td>கீழ்</td></tr>
<tr><td></td><td>வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>--</td></tr>
<tr><td>15.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td>சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை</td></tr>
<tr><td>16.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td><table><tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr><tr><td>அ.சா.1</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr><tr><td>அ.சா.2</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr><tr><td>அ.சா.3</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr></table></td></tr>
<tr><td>17.</td><td>எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>26-05-2026</td></tr>
<tr><td>18.</td><td>எதிரி தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>19.</td><td>எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>U/s. 320 Cr.P.C Petition filed and dismissed in M.P. No. 04/2026, dated: 25.05.2026</td></tr>
<tr><td>20.</td><td>எதிரி/குற்றமுறையிட்டாளார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>U/s. 311 Cr.P.C Petition filed and allowed in M.P. No. 02/2026, dated: 25.05.2026</td></tr>
<tr><td>21.</td><td>எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>22.</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர்</td><td>திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி</td></tr>
<tr><td>23.</td><td>எதிரி தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு. N. சாரதி</td></tr>
</table>



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:32:28 +0530

| | | |
|---|---|---|
| 24. | எதிரியின் கூற்று | எதிரியின் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 25. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 26-05-2026 |
| 26. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 26-05-2026 |
| 27. | நீதிபதியின் முடிவு | முடிவாக, எதிரி பிரிவுகள் 296(b), 115(2) ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை பிரிவு 278(1) BNSS ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.<br>இவ்வழக்கில் தடயசொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடயசொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த வழக்கு 30-06-2025 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26-05-2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-1 திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. சாரதி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(26-05-2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

**<u>தீர்ப்புரை</u>**

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : -**

1. கடந்த 02.06.2025ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் புகார்தாரராகிய துரை முத்துராஜன் கமுதி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஒரு வேலையாக சென்ற போது அங்கு மது போதையில் இருந்த எதிரியானவர் புகார்தாரரைப் பார்த்து ஏன்டா சுன்னி மகனே என்று அசிங்கமாகப் பேசி, கையால் அடித்து கீழே தள்ளிவிட்டு வலது கை எலும்பில் சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காகஎதிரி மீது பிரிவுகள் 296(பி), 115(2) BNS ன் கீழ் கமுதி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு பிரிவு 230 B.N.S.S Act ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்ட பின்பு எதிரி மீது பிரிவுகள் 296(பி), 115(2) BNS ன் கீழான குற்றம் பற்றி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>**

i. அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

ii. அசா.3 கமுதி காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர்

திரு.சக்திவேல் கணேஷ் அவரது கையொப்பம் நன்கு பரிட்சயம் என்றும், ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி சார்பு ஆய்வாளர் திரு.சக்திவேல் கணேஷ் அவர்கள் அ.சா.1 னிடம் இருந்து புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

iii. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து பிரிவு 351 (1) (b) B.N.S.S Act ன் படி கேள்விகள் கேட்க எதிரி சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

5. **தீர்வுக்குரிய பிரச்சனை :–**

i. எதிரி மீது பிரிவுகள் 296(பி), 115(2) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6. அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:–**

i. அசா.1 வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் ஆவார். அ.சா.1 ன் சாட்சியத்தில் இருந்து எதிரி அ.சா.1 ன் மருமகன். சுமார் 1 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் காலை 10.00 மணியளவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்த போது

தெருவில் கூட்டமாக 20க்கும் மேற்பட்ட நபர்கள் கூச்சலிட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், கூட்டத்திற்குள் இருந்த யாரோ அ.சா.1 யை கீழே தள்ளிவிட்டதில் லேசான காயம்பட்டதாகவும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் லேசான காயம் என்பதால் மருத்துவமனை செல்லவில்லை என்றும், இது குறித்து கமுதி போலீசாரிடம் சொன்ன போது போலீசார் அ.சா.1 னிடம் வெள்ளை பேப்பரில் கையொப்பம் (**அ.சா.ஆ.1**) பெற்றதாகவும், புகார் வாக்குமூலத்தில் என்ன சங்கதிகள் உள்ளது என்று அ.சா.1 க்கு தெரியாது என்பது அ.சா.1 ன் சாட்சியம் ஆகும். அ.சா.1 ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில் அ.சா.1 ன் சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்றும், புகார் மனு நம்பத்தகுந்த ஆவணம் இல்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

ii. அ.சா.2 சம்பவயிட சாட்சியாக சாட்சிப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, இவரது சாட்சியம் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

iii. அசா.3 தனது சாட்சியத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சக்திவேல் கணேஷ் அவர்கள் கடந்த 02.06.2025 ம் தேதியன்று 13.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 கொடுத்த புகார் மனுவைப் பெற்று **(அ.சா.ஆ.2)** நிலையக் குற்ற எண். 121/2025 பிரிவுகள் 296(பி), 115(2) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (**அ.சா.ஆ.3)** பதிவு செய்து அன்றைய தினமே 11.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (**அ.சா.ஆ.4)** மற்றும் மாதிரி வரைபடம் (**அ.சா.ஆ.5)** தயார் செய்து, சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்று


THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:32:58 +0530

சாட்சியம் அளித்துள்ளார்.

iv. மேலும், அ.சா.3 ன் சாட்சியத்தில் இருந்து சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி நிலையத்தில் தோன்றி சட்டப்பிரிவு 35(3) and (4) அழைப்பாணையின் மூலம் பிணையத்தில் சென்றுள்ளார் என்றும், அத்துடன் வழக்கின் புலன்விசாரணை முடித்து நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

v. மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலிக்கையில் அசா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், வழக்கு புகார் மனு நம்பத்தகுந்த ஆவணம் இல்லை என்று நீதிமன்றம் முடிவு செய்துள்ளதாலும், அ.சா.1 ம், எதிரிகளும் சமாதானமாகி விட்டதாக குவிமுச பிரிவு 320(2)–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரி மீது பிரிவுகள் 296(பி), 115(2) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

vi. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரி பிரிவுகள் 296(பி), 115(2) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரி பிரிவு 278(1)ன்

கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

vii. இவ்வழக்கில் தடயசொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடயசொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு மே திங்கள் 26ம் நாள் செவ்வாய்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:33:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. துரைமுத்துராஜன் |
| அ.சா.2 | திரு. குருமூர்த்தி |
| அ.சா.3 | திரு. ராமமூர்த்தி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 02.06.2025 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | 02.06.2025 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 02.06.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 02.06.2025 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 02.05.2025 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்றுபொருள்:—** இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:—** இல்லை

**குறிப்பு :—**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:33:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.